கிபி 10 முதல் 13-ம் நூற்றாண்டு வரை பிற்கால சோழர்கள் ஆட்சியில் இருந்தனர். அப்போது சோழப் பேரரசின் 2-வது தலைநகரமாக காஞ்சி இருந்தது. சோழர்களுக்கு பிறகு பாண்டியர்கள் வசம் இருந்த காஞ்சி, 14-ம் நூற்றாண்டில் விஜயநகர மன்னர்கள் கைகளில் சென்றது.

திருக்கழுகுன்றத்தை அடுத்த பொன்விளைந்த களத்தூரில் 1,300 ஆண்டுகள் பழமையான முன்குடுமீஸ்வரர் கோயில் அமைந்துள்ளது. சிவலிங்கத்தின் மீது குடுமி (முடிச்சு) இருப்பது மூலவரின் சிறப்பு. கோயிலின் கட்டமைப்பு சோழர் கால கட்டிடக் கலைக்கு சான்றாக விளங்குகிறது.

திருவண்ணாமலையில் சீரமைக்கப்பட்ட அண்ணா சிலையை பொதுப்பணி துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று திறந்து வைத்தார். அருகில், சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி, ஆட்சியர் க.தர்ப்பகராஜ் உள்ளிட்டோர்.

திருவண்ணாமலையில்

சீரமைக்கப்பட்ட அண்ணா சிலை

அமைச்சர் எ.வ.வேலு திறந்து வைத்தார்

■ திருவண்ணாமலை

திருவண்ணாமலை மாநகராட்சி அண்ணா சாலையில் பல ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்டிருந்த அண்ணா சிலை மற்றும் பீடம் சேதம் அடைந்த நிலையில் இருந்து வந்தது. இந்நிலையில் சிலை அகற்றப்பட்டு புதிய பீடம் அமைக்கும் பணி கடந்த 2 மாதங்களுக்கு மேலாக பொதுப்பணி துறை சார்பில் நடைபெற்று வந்தது.

பணிகள் நிறைவடைந்து நேற்று திறப்பு விழா நடைபெற்றது. விழாவுக்கு மாவட்ட ஆட்சியர் க.தர்ப்பகராஜ் தலைமை தாங்கினார். சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி முன்னிலை வகித்தார். இதில், பொதுப்பணி துறை அமைச்சர் எ.வ.வேலு கலந்து கொண்டு, அண்ணா சிலையை திறந்து வைத்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார்.

பின்னர் அமைச்சர் எ.வ.வேலு, செய்தியாளர்களிடம் கூறும்போது, "இந்த சிலை திறப்பு விழாவானது கடந்த 1969-ம் ஆண்டு மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதியால் திறக்கப்பட்டது. கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக வெயில், மழையினால் சிலை சிதிலமடைந்த நிலையில் இருந்து வந்தது. இப்பகுதி குடியிருப்புவாசி ஒருவர் முதல்வருக்கு, அண்ணா சிலையை புனரமைப்பு செய்ய வேண்டும் என கடிதம் அனுப்பியுள்ளார். அதனடிப்படையில் முதல்வர் வழங்கிய அறிவுரை மற்றும் ஆணையின்படி தற்போது இந்த சிலையானது முழுமையாக மறுசீரமைக்கப்பட்டுள்ளது. அதில் வைக்கப்பட்டிருந்த பெயர்கள் ஒன்று கூட மாறாமல் மீண்டும் அனைத்து பெயர்களையும் இடம்பெற வைத்து பொதுப்பணி துறை மூலம் திறக்கப்பட்டுள்ளது. மேலும், அண்ணா சிலை நிறுவ நிதி உதவி வழங்கியவர்களின் பெயர்களும், இடம்பெற்றுள்ளன.

தமிழ்நாட்டுக்கு தமிழ்நாடு, என பெயர் சூட்டியதோடு மட்டுமின்றி, தமிழ்நாட்டில் இருமொழி கொள்கையை கொண்டு வந்தவர் அண்ணா. திராவிட இயக்கத்துக்கு மூலகர்த்தா அண்ணா. அவரது சிலையை திராவிட மாடல் ஆட்சியில் மறுசீரமைக்கப்பட்டு திறக்கப்பட்டதால் மக்கள் அனைவரும் மகிழ்ச்சி அடைந்துள்ளார்கள்" என்றார்.

விழாவில், எம்.பி., அண்ணாதுரை, மாநில தடகள சங்க துணைத்தலைவர் எ.வ.வே.கம்பன், எம்எல்ஏக்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், மேயர் நிர்மலா வேல்மாறன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

ஆரணி நகராட்சி அலுவலகம் முன்பு

அனைத்து ஒய்வூதியர்கள் நல அமைப்பினர் ஆர்ப்பாட்டம்

■ திருவண்ணாமலை

திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி நகராட்சி அலுவலகம் முன்பு, தமிழ்நாடு பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி அனைத்து ஓய்வூதியர்கள் நல அமைப்பின் ஆரணி கிளை சார்பில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆரணி கிளைத்தலைவர் எஸ். குமார் தலைமை தாங்கினார். நிர்வாகிகள் எம்.பார்த்திபன், செல்வம், எஸ்.சம்பத், பன்னீர்செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆரணி கிளைச் செயலாளர் என்.வளையாபதி வரவேற்றார். வேலூர் மண்டல பொறுப்பாளர் இ.தேவகுமார் தொடக்க உரையாற்றினார்.

மாவட்டத்தலைவர் பி.கிருஷ்ணமூர்த்தி கலந்து கொண்டு ஆர்ப்பாட்டத்தை விளக்கி பேசினார்.

ஆர்ப்பாட்டத்தின் போது, ஆந்திர அரசு வழங்குவது போன்று பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி ஓய்வூதியர்கள் அனைவருக்கும் ஓய்வூதிய பண பலன்கள் மற்றும் ஓய்வூதியம் கருவூலம் மூலம் வழங்கிட வேண்டும். ஓய்வூதியர்களுக்கு சி.பி.எஸ் ரத்து செய்து பழைய ஓய்வூதியம் வழங்கிட வேண்டும். அனைத்து ஓய்வூதியர்களுக்கும் இலவச மருத்துவ திட்டத்தை அமல்படுத்திட வேண்டும் உள்ளிட்ட 15 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கமிட்டனர்.

ஆரணி நகராட்சி அலுவலகம் முன்பு அனைத்து ஓய்வூதியர்கள் நல அமைப்பினர் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பாஜக ஆலோசனை கூட்டத்துக்கு வந்த

வேலூர் இப்ராஹீம் கைது

■ ராணிப்பேட்டை

பாஜக ஆலோசனை கூட்டத்துக்கு வந்த பாஜக தேசிய சிறுபான்மை செயலாளர் வேலூர் இப்ராஹீமை போலீஸார் கைது செய்தனர்.

ராணிப்பேட்டை மாவட்டம் மேல்விஷாரம் பகுதியில் பாஜக கட்சி நிர்வாகி இல்லத்தில் கலந்தாய்வு கூட்டத்துக்கான ஏற்பாடு நேற்று செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்ச்சியில், கலந்து கொள்ள ராணிப்பேட்டை சட்டப்பேரவை பொறுப்பாளரும், தேசிய சிறுபான்மை பிரிவு செயலாளருமான வேலூர் இப்ராஹிம் மேல்விஷாரம் பகுதிக்கு தனது காரில் நேற்று வந்து கொண்டிருந்தார்.

அப்போது, ஆற்காடு மேம்பாலம் அருகே அவரை தடுத்து நிறுத்திய ராணிப்பேட்டை போலீஸார் காரில் அமர்ந்திருந்த வேலூர் இப்ராஹீமை கைது செய்ய முயன்றனர்.

இதற்கு, எதிர்ப்பு தெரிவித்த வேலூர் இப்ராஹீம் போலீஸாரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். இதை பொருட்படுத்தாத போலீஸார் அவரை கைது செய்து ஆற்காடு தனியார் மண்டபத்தில் தங்க வைத்தனர்.

மேல்விஷாரம் பகுதிக்கு வேலூர் இப்ராஹிம் வருகை தருவதற்கு அப்பகுதி இஸ்லாமிய மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்திருந்த நிலையில் அசம்பாவிதத்தை தவிர்க்கும் வகையிலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கைது நடவடிக்கையை மேற்கொண்டதாக போலீஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

மேலும், வேலூர் இப்ராஹிம் உடன்வந்தபாஜகநிர்வாகிகளும் கைது செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

ராணிப்பேட்டை அருகே வேலூர் இப்ராஹீமை நேற்று போலீஸார் கைது செய்து அழைத்துச்சென்றனர்.

ஐஎன்எஸ் ராஜாளி கடற்படை தளத்தில்

துப்பாக்கி வெடித்து பெண் அதிகாரி காயம்

■ அரக்கோணம்

அரக்கோணம் ஐஎன்எஸ் கடற்படை விமான தளத்தில் இரவு பணியில் ஈடுபட்டிருந்த வடமாநில பெண் வீரரின் கையில் இருந்த துப்பாக்கி திடீரென வெடித்ததால் காயம் ஏற்பட்டது.

ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் பகுதியில் மத்திய அரசு பாதுகாப்பு துறைக்கு சொந்தமான ஐஎன்எஸ் ராஜாளி கடற்படை விமானதளம் உள்ளது. இந்த கடற்படை விமான தளத்தில் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த வீரர்கள், வீராங்கனைகள் மற்றும் அதிகாரிகள் பணியாற்றி வருகின்றனர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு பணியில் ஈடுபட்டிருந்த உத்தரபிரதேச மாநிலத்தைச் சேர்ந்த ஆயிஷா பண்டி (20) என்பவர் கடற்படை அதிகாரியாக பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தார். அப்போது, அவரது கையில் இருந்த துப்பாக்கி எதிர்பாராதவிதமாக வெடித்ததாக கூறப்படுகிறது.

இதனால், அவரது தோள்பட்டையில் காயம் ஏற்பட்டது. அவருடன், பணியில் ஈடுபட்டிருந்த வீரர் உடனடியாக ஆயிஷாவை மீட்டு சிகிச்சைக்காக சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார். இதுகுறித்து அரக்கோணம் நகர போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

வரி விளம்பரங்கள்

சுய செய்தி

பெயர்மாற்றம்

CHANGE OF NAME

My daughter
Given name: **THEJASVI**
Surname: **PURUSOTHAMAN**
(Old name)
D/o. Purusothaman
Date of birth : **15.06.2019**
residing at No.153,
Thadiraman Vattam,
Elagiri Village and Post,
Tirupattur Taluk and District,
Tamil Nadu - 635853.
shall henceforth be known as
Given name: **THEJESVI**
Surname: **PURUSOTHAMAN**
(New Name)
Vellore,
11.12.2025. DEEPARTHY

கல்வி

ஆசிரியர் / ஆசிரியை தேவை

AUXILIUM COLLEGE
(Autonomous)
Gandhi Nagar, Vellore - 632006
(Accredited by NAAC with A+ Grade in the 4th cycle)
(Affiliated to Thiruvalluvar University, Vellore)

Applications are invited from eligible women candidates for the post of

ASSISTANT PROFESSOR in BOTANY & ZOOLOGY (Aided Post)

Qualification: As per UGC norms
(NET / SET / Ph.D)

Apply on or before **18.12.2025** to

THE SECRETARY
AUXILIUM COLLEGE
(Autonomous)
Gandhi Nagar, Vellore - 632006
Email id:
secretary@auxiliumcollege.edu.in

ஐஏஎஸ் அதிகாரி சுப்ரியா சாஹூக்கு முதல்வர் வாழ்த்து

■ சென்னை

தமிழக ஐஏஎஸ் அதிகாரி சுப்ரியா சாஹூக்கு ஐ.நா. விருது தமிழ்நாடு பெருமை கொள்கிறது. காலநிலை மாற்றம் தொடர்பான செயல்பாடுகளில் உலக அளவில் தமிழகம் சிறப்பான இடத்தை பெற ஆர்வத்துடன் உழைத்ததற்காக ஐ.நா. அமைப்பின் 'சாம்பியன்ஸ் ஆப் தி எர்த்' விருதை வென்றுள்ள தமிழக அரசின் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் & வனங்கள் துறை செயலர் சுப்ரியா சாஹூக்கு எனது பாராட்டுகள் என முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித்தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், ஆசிரியர்கள், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தக் குழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

HDFC BANK
We understand your world

பதிவு அலுவலகம்: ஹெச்டிஎப்சி பேங்க் ஹவுஸ், சேனாபதி பபட் மார்க், லோயர் பேரல், மும்பை-400 013.

தங்க நகைகளுக்கான ஏல விற்பனை அறிவிப்பு

இதன் மூலம் குறிப்பாக கடன்தாரர்களுக்கும் பொதுவாக பொதுமக்களுக்கும் அறிவிப்பது என்னவென்றால், பின்வரும் கணக்குகளில் கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்ட / தங்க நகைகளை விற்பதற்கு பொது ஏலம் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. நகைக் கடன் பாக்கிகளை செலுத்துமாறு HDFC பேங்க் லிமிடெட் (வங்கி) அறிவிப்புகளை அனுப்பிய போதும், நகைக் கடன் பெற்ற கடன்தாரர்கள் தாங்கள் முறையாக கையொப்பமிட்டு ஒப்புக்கொண்ட கடன் ஒப்பந்தத்தின் படி, கடனை முறையாக திருப்பிச் செலுத்தவில்லை. பின்வரும் கணக்குகளில் உள்ள பாக்கித் தொகை முழுவதையும் ஏழு நாட்களுக்குள் செலுத்துமாறும், தவறினால் மேல் அறிவிப்பின்றி, அடமானத்தில் உள்ள கடனுக்கு ஈடான தங்க நகைகள் முழுவதும் ஏலத்தில் விட வங்கிக்கு முழு சுதந்திரம் உண்டு எனக் கடன்தாரர்களுக்கு HDFC அறிவிப்பு ஒன்றையும் அளித்துள்ளது. ஆனாலும், கடன்தாரர்கள் அக்கறையின்றி பாக்கித் தொகைகளை செலுத்தாமல் இருந்து வருகின்றனர். எனவே, அடமான கடன் ஒப்பந்தத்தின் கீழ், கடனுக்கு ஈடாக வைக்கப்பட்ட தங்க நகைகள் மீது தமக்குரிய உரிமையை செயல்படுத்துவதற்கு, அடமானம் பெற்றவர் என்ற அளவில் ஒப்பந்தத்தின் படி தனது உரிமைகளை செயல்படுத்த வங்கி உத்தேசித்துள்ளது. அதன்படி, கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்டுள்ள தங்க நகைகள் முழுவதையும் ஏலத்தில் விற்று கடன்தாரர்களிடமிருந்து வங்கிக்குச் சேர வேண்டிய கடன் பாக்கியை வசூலிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

ஏலமானது கீழ்க்கண்ட கிளைகளில் 22.12.2025 தேதியில் மாலை 4.00 மணியளவில் நடத்தப்படும்.
எந்தவொரு காரணத்தால் அடமானம் வைக்கப்பட்ட சொத்தின் ஏலம் நடைபெறாவிடில் அல்லது குறிப்பிட்ட தேதியில் முடியவில்லை என்றால் அந்த ஏலத்தை எந்தவொரு அடுத்த தேதி மற்றும் நேரத்தில் நடத்த வங்கிக்கு உரிமை உண்டு.

வ. எண்	நகை கடன் எண்	கடன்தாரர்கள் பெயர்	கடன் தொகை	ஏலம் நடைபெறும் இடம் (கிளையின் முகவரி)
1	4000443842	அரவிந்த் K P	₹ 1,01,900/-	HDFC பேங்க் லிமிடெட், எண்.131 - A, சோளிங்கர் நெடுஞ்சாலை, அரக்கோணம் - 631001
2	76032154	விஜி M	₹ 2,54,000/-	HDFC பேங்க் லிமிடெட், எண்.1302, P J N ரோடு, வாணியம்பாடி, வேலூர் 635751

ஏலமானது "உள்ள இடத்தில் உள்ளவாறான" மற்றும் "உள்ளது உள்ளவாறான" என்ற அடிப்படையில் நடைபெறும். மேற்குறிப்பிட்ட தங்க நகைகளில் தரம், தூய்மை, காரட்டேஜ், எடை அல்லது மதிப்பீடு ஆகியவை பற்றி ஏலத்தின்போது வங்கியானது பிரதிநிதித்துவம் மற்றும் உத்தரவாதம் தர இயலாது. ஏலம் நடைபெறுவதற்கு 45 நிமிடத்திற்கு முன்பாக வல்லுநர் அறிவுறுத்தலுடன் அல்லது அறிவுறுத்தல் இன்றி ஏலதாரர்கள் அவர்களாகவே அவர்கள் சொந்த செலவில் தங்க ஆபரணங்களின் தரம், தூய்மை, காரட்டேஜ், எடை அல்லது மதிப்பீடு குறித்து தங்களுடைய ஏலங்களை சமர்ப்பிப்பதற்கு முன், அவற்றைச் சரிபார்ப்பது, ஆய்வு செய்வது மற்றும் திருப்திப்படுத்துவது நகைகளை வாங்குபவர்களின் முழு மற்றும் முழுமையான பொறுப்பாகும். இது தொடர்பாக வங்கியானது குறைந்தபட்ச கேட்புவிலையை நிர்ணயம் செய்து அதற்குட்பட்டு அனைத்து ஏலத் தொகைகளும் ஏற்கப்படும். ஏல நடவடிக்கைகள் மற்றும் விற்பனை (ஏதாவது இருந்தால்) ஆகியவை வங்கியின் தனிப்பட்ட முடிவின் படி சரி என்று கருதப்பட்ட மேற்கொண்டு விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஏலம் நடைபெறும். மேலே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள் கடன் ஒப்பந்தத்தின் அடிப்படையில் வங்கிக்கு செலுத்த வேண்டிய தொகையை ஏலத்திற்கு முன் தனது தனிநபர் கடன் கணக்கில் முழுமையாக செலுத்தினால், மேற்குறிப்பிட்ட கடன் கணக்கில் ஈடாக அடமானம் வைக்கப்பட்டுள்ள தங்க நகைகள் கடன் விலக்கி கொள்ளப்படும் மற்றும் ஏலம் எந்தவித முன் அறிவிப்பும் இன்றி ஏலமானது வங்கியால் விலக்கி கொள்ளப்படும். வங்கியின் கீழே கையொப்பமிட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி அவருக்கு ஏலத்தை தள்ளிவைக்கவோ அல்லது ரத்து செய்யவோ முன் அறிவிப்பு எதுவும் இன்றி ஏல நடவடிக்கைகளை நிறுத்தவோ காரணங்கள் எதுவும் தெரிவிக்காமலேயே ஏலத்தை மறுக்கவோ, தகுந்த காரணத்தை கூறாமலேயே ஏலத் தொகைகள் / ஆபர்களை மறுக்கவோ அதிகாரம் உள்ளது என்பதை அறியவும்.

தேதி : 12.12.2025 **Sd/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ஹெச்டிஎ.ப்சி பேங்க் லிமிடெட்**

TNPL தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம்
காகித நகர், மொண்டிப்பட்டி – 621 306. திருச்சி மாவட்டம், தமிழ்நாடு.

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ஒப்பந்தப்புள்ளி எண்.	பணியின் விவரம்	கடைசி நாள்
252623 003652	திருச்சி TNPL அலகு - IIல் உள்ள Pulp Mill-ல் செய்முறை கட்டுப்பாட்டு அறை மற்றும் கள இயக்கங்களுக்கு உதவி செய்தல்	26.12.2025

பிழை திருத்தங்கள் இருப்பின் அவை NIC இணையதளத்தில் மட்டும் வெளியிடப்படும். மேலும் விபரங்களுக்கு www.tntenders.gov.in/nicgep/app இணையதளத்தில் பார்வையிடவும்.
செ.ம.தொ.இ/6589/ஒப்பந்தப்புள்ளி/2025 நாட்டின் இயற்கைவளம் போற்றும் காகிதம் செய்வோம்

திருநெல்வேலி மாநகராட்சி
மின்னணு முறையிலான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு ந.க.எண். TP3/3323/2025

1	ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் பெயர் & முகவரி	ஆணையாளர், திருநெல்வேலி மாநகராட்சி
2	வேலையின் விபரம், முன் வைப்புத் தொகை மற்றும் பணிகளின் எண்ணிக்கை	பணி விபரம்: EXPRESSION OF INTEREST (EOI)- For Demolition of Unauthorized Portion of Building at VJ Hospital, Tirunelveli. Tirunelveli City Municipal Corporation (TCMC) invites sealed **Expressions of Interest (EOI)** from eligible and experienced demolition contractors for the **safe demolition and debris disposal** of the following structures located at: **Location:** VJ Hospital, 12–12/1, STC College Road, Perumalpuram, Tirunelveli-7 **In compliance with:** Hon'ble High Court Orders **WP(MD) 8033/2020, WMP(MD) 22091/2025 & WMP(MD)27192/2025** — எண்ணிக்கை: 1
3	ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த இணையதள முகவரி	மேற்காணும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அட்டவணையை கீழ்க்காணும் இணையதளத்தில் இருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். https://tntenders.gov.in
4	ஒப்பந்தப்புள்ளிகள் நமூனா இறக்கம் செய்தல்	13.12.2025 காலை 10 மணி முதல் 22.12.2025 பிற்பகல் 3.00 மணி வரை
5	ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பித்தல்	13.12.2025 காலை 10 மணி முதல் 22.12.2025 பிற்பகல் 3.00 மணி வரை
6	ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள்	22.12.2025 பிற்பகல் 3.30 மணி
7	முன் கலந்தாய்வு கூட்டம் நடைபெறும் இடம், நாள் மற்றும் நேரம்	மைய அலுவலகம் திட்டப்பிரிவு திருநெல்வேலி மாநகராட்சி, 17.12.2025 காலை 11.00 மணி

செ.ம.தொ இ./6610/ஒப்பந்தப்புள்ளி/2025 ஆணையாளர், திருநெல்வேலி மாநகராட்சி.

மதுரை மாநகராட்சி
ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை

மதுரை மாநகராட்சி ஆணையாளர் அவர்களால் மதுரை மாநகராட்சியால் மேற்கொள்ளப்படவுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணிக்கு தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்படுகிறது.

பணியின் பெயர்	ஒப்பந்தபுள்ளிகள் சமர்ப்பிக்கும் நாள்	ஒப்பந்தபுள்ளிகள் திறக்கப்படும் நாள்
EI/017517/15th CFC AAQ/2025-26 மதுரை மாநகராட்சி 15th CFC (AAQ) 2025-26 திட்டத்தின் கீழ் மதுரை மாநகராட்சியில் பணிகள் மேற்கொள்ள தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடம் இருந்து ஒப்பந்தபுள்ளி வரவேற்கப்படுகிறது.(குறைந்தபட்சமாக ஒரு சிப்பத்தின் மதிப்பு ரூ.17.00/- இலட்சம் முதல் அதிகபட்சமாக ரூ.111.00/- இலட்சம் வரை ஆகும்.) (மொத்தம் -13 சிப்பம்)	From 15.12.2025 To 30.12.2025 3.00 pm	30.12.2025 4.00 pm

இதர விபரங்களை http://www.tntenders.gov.in என்ற இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம்.
Contact No : 0452 - 2540333
ஆணையாளர்
மதுரை மாநகராட்சி
செமாதொஇ /6599/ஒப்பந்தப்புள்ளி / 2025

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம்
19–ஏ, ருக்மணி இலட்சுமிபதி சாலை, எழும்பூர், சென்னை–600008.
CIN U74999TN1971SGC005967

ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண்.என்ஐடி.47/க.பி/ஒ.எண்.47/2025-26 (இணையவழி மட்டும்) நாள்: 11.12.2025

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் சார்பாக ஒப்பந்தப்புள்ளிகள் **"ஒரு உறை முறையில்"** இணையவழி வாயிலாக மட்டும் பின்வரும் பணிக்கு **வகுப்பு– IV மற்றும் அதற்குமேல்** மாநில அளவில் உள்ள தமிழ்நாடு பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை மற்றும் இதரத்துறைகள் /மத்திய அரசுக்கு உட்பட்ட துறைகள் மற்றும் தமிழ்நாடு அரசு சார்பு நிறுவனங்களில் பதிவுபெற்ற ஒத்த பணிகளில் அனுபவம் பெற்ற ஒப்பந்தக்காரர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்க கடைசி நாள். **30.12.2025** மாலை **15.30** மணி (சேவையக கடிகார நேரத்தின் படி). பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள். **31.12.2025** மாலை **15.30** மணிக்கு (சேவையக கடிகார நேரத்தின் படி) திறக்கப்படும்.

பணியின் பெயர்	திட்ட மதிப்பீடு	முன் வைப்புத் தொகை
ஏ. சாத்தனூர் உள்ள சிப்காட் தொழிற்பூங்காவில் 10.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட நிலத்தடி நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் பணி	ரூ.93.10 இலட்சம் (GST 18% உட்பட)	ரூ.57,000/–*

* முன் வைப்பு தொகையை இணையதளம் மூலமாகவோ (https://tntenders.gov.in) அல்லது eBG வாயிலாகவோ இணையதளத்தில் செலுத்தலாம் (இணைப்பு–II இல் சான்றளிக்கப்பட்ட வங்கிகளின் பட்டியலின்படி)

ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்ட இணையதளம் மூலமாக இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இணையதள முகவரி https://tntenders.gov.in

செ.ம.தொ.இ./6614/ஒப்பந்தப்புள்ளி/2025 சிறப்புத் தலைமை பொறியாளர்

தமிழ்நாடு கிராம வங்கி
TAMIL NADU GRAMA BANK
(A Government owned Bank Sponsored by Indian Bank)
வட்டார அலுவலகம், காஞ்சிபுரம் – 631502

தங்க நகைகள் ஏல அறிவிப்பு

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனாளிகள் தங்க ஆபரணங்களுக்கு எதிராக எங்கள் கிளைகளில் கடனைப் பெற்றுள்ளனர். பதிவுத் தபால் நோட்டீஸ் அனுப்பிய பிறகும் தங்களது நிலுவைத் தொகையைத் திருப்பிச் செலுத்த தவறிவிட்டனர். எனவே, கடன் பெற்றவர்கள் 29.12.2025 அன்று பிற்பகல் 3.30 மணி அல்லது அதற்கு முன் அந்தந்த கிளைகளில் அசல், வட்டி மற்றும் பிற செலவுகளைத் திருப்பிச் செலுத்திய பின் தங்க ஆபரணங்களை மீட்டுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள், தவறினால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் கணக்குகளில் உள்ள தங்க ஆபரணங்கள் பகிரங்கமாக ஏலம் விடப்படும். அந்தந்த கிளைகளில், கடன் வாங்குபவர்களின் பொறுப்பில் 29.12.2025 அன்று மாலை 4.00 மணிக்கு பகிரங்கமாக ஏலம் விடப்படும்.
ஏலம் "உள்ளது உள்ளபடி" என்ற நிபந்தனையின் அடிப்படையில் நடத்தப்படும். கிளை மேலாளர்களுக்கு எந்த காரணமும் கூறாமல் ஏலத்தை ரத்து செய்யவோ/ ஒத்திவைக்கவோ உரிமை உண்டு. ஏலத்தின் மூலம் பெறப்பட்ட ஏலத்தொகை அந்தந்த கடன் கணக்குகளில் சரிசெய்யப்படும். மேலும் ஏலத்தொகையை சரிசெய்த பிறகும் ஏதேனும் நிலுவைத் தொகைகள் நிலுவையில் இருந்தால், உரிய சட்ட நடவடிக்கை மூலம் அந்தந்த கடனாளிகளிடமிருந்து அது வசூலிக்கப்படும். இந்த அறிவிப்பு, நோட்டீஸ் பெறாத அனைத்து கடனாளிகளுக்கும் வெளிநாட்டில் தங்கியுள்ள கடனாளிகளுக்கும், இறந்த கடனாளிகளின் சட்டபூர்வ வாரிசுகளுக்கும் பொருந்தும்.

கிளை: சேத்பட்; நேரு தெரு, சேத்பட், திருவண்ணாமலை – 606801 Ph: 8300077023

வ. எண்	தேதி	கணக்கு எண்.	கடன்தாரர் பெயர்	மொத்த எடை (கி)
1	25-10-2024	10237001251	அருமைசெல்வம் மைக்கேல்	16.600

கிளை: கலசபாக்கம்; 6/1221A மெயின்ரோடு, கலசபாக்கம், திருவண்ணாமலை – 606751, போன்: 04181 241261

வ. எண்	தேதி	கணக்கு எண்.	கடன்தாரர் பெயர்	மொத்த எடை (கி)
1	14-10-2024	10235886676	முருகன் E	8.000
2	16-10-2024	10236162867	ஏழுமலை V	7.900
3	24-10-2024	10236839919	பவுன்குமார் P	36.800
4	07-10-2024	10235389404	கார்த்திகேயன் V	127.700

கிளை: கண்ணமங்கலம்; 0/5, சசிகுமார் நகர், கண்ணமங்கலம், திருவண்ணாமலை – 632311. Ph: 04173 240900

வ. எண்	தேதி	கணக்கு எண்.	கடன்தாரர் பெயர்	மொத்த எடை (கி)
1	22-10-2024	10236718962	திவ்யா கருணாமூர்த்தி	38.000
2	24-10-2024	10236852114	தேவன் வரதராஜ்	15.700
3	19-10-2024	10236513374	கங்கா மூர்த்தி	40.100

கிளை: கீழ்பெண்ணாத்தூர்; 168/1, திருவண்ணாமலை ரோடு, கீழ்பெண்ணாத்தூர், திருவண்ணாமலை – 604601, போன்: 04175 242040

வ. எண்	தேதி	கணக்கு எண்.	கடன்தாரர் பெயர்	மொத்த எடை (கி)
1	18-10-2024	10236355076	சரஸ்வதி B	49.700

கிளை: நல்லவன்பாளையம்; தண்ட்ராம்பேட் மெயின் ரோடு, நல்லவன்பாளையம், திருவண்ணாமலை – 606603, போன்: 04175 236566

வ. எண்	தேதி	கணக்கு எண்.	கடன்தாரர் பெயர்	மொத்த எடை (கி)
1	07-10-2024	10235476397	மஞ்சுநாதன் S	16.300

கிளை: பாச்சல்; NH மெயின் ரோடு, கண்ணகருக்கை ரோடு, பாச்சல் அஞ்சல், செங்கம் தாலுக் 606704, போன்: 8300077235

வ. எண்	தேதி	கணக்கு எண்.	கடன்தாரர் பெயர்	மொத்த எடை (கி)
1	15-10-2024	10236023118	அமுதா R